MALAI MALAR 02 JAN 2008

மாலை மலர் கோவை 2-1-2008 ★★★

# ஈஷா சுகாதார விழிப்புணர்வு திட்டம்

ஈஷா அறக்கட்டளை சார்பில் கிராம புத்துணர்வு இயக்கத்தின் கீழ் சுகாதார விழிப்புணர்வு பிரசார திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை ஈஷா யோகமையத்தில் நிறுவனர் சத்குரு தொடங்கி வைத்தார். கிராம புத்துணர்வு திட்டத்தின் கீழ் இயங்கி வரும் நடமாடும் இலவச மருத்துவ ஊர்திகள் சென்று வரும் 1080 கிராமங்களில் இத்திட்டத்தை தொடங்கி பின்னர் தமிழக அளவில் மற்ற கிராமங்களுக்கும் விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் மொத்தம் 576 கிராமங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. எச்.ஐ.வி., எலும்புருக்கி நோய், கண் மற்றும் பல் பாதுகாப்பு ஆகியவை குறித்த சிறப்பு பிரசாரங்கள் பெரிய மருத்துவமனைகள் மற்றும் அரசு நிறுவனங்கள் ஆதரவுடன் நடத்தப்பட உள்ளது. தெரு நாடகங்கள், ஒலி மற்றும் ஒளிக்காட்சிகள் மற்றும் வரைபடங்கள் மூலம் விழிப்புணர்வு உருவாக்கப்படும். முதன் முதலாக செம்மேடு கிராமத்தில் நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வு பிரசாரம் நடந்தது.